# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 26.04.2021 supeedsam.com supeedsam@gmail.com







# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்த சதி

## அரசியல் தலைவர்கள் சீற்றம்



(காரைதீவு சகா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் வெளியிடப்பட்ட தரங்குறைப்பு அறிவித்தலினால் மீண்டும் இவ்விவகாரம் பூதாகரமாக உருவெடுத்துள்ளது.

எனினும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமிறக்கும் செயற்பாட்டை எதிர்வரும் 4ஆம் திகதி வரை இடைநிறுத்திவைக்குமாறு உள்நாட்டலுவல்கள்

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையின் அனைத்து பாடசாலைகளுக்கும் பூட்டு

(கதிரவன்)

திருகோணமலை மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோணா நோயாளர்கள் காரணமாக மாவட்டத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்களும் இத்தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.வில் 100 பேருக்கு நடந்த திடீர் சோதனையில் இருவருக்கு தோற்று



(மட்டுநிருபர்)

மட்டக்களப்பில் சனிக்கிழமை 100 பேரிடம் எழுந்தமானமாக நடத்தப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் ஈ.உதயகுமார் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## ரிஷாட் பதியுதீனின் கைது நீதிக்கு விரோதமானது




உயிர்த்த ஞாயிறு தாக்குலுடனோ அதன் சூத்திரதாரிகள் மற்றும் தற்கொலைதாரிகளுடனோ முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கும் அவரது சகோதரர்

02 ஆம் பக்கத்தில்...



## கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டிய தேவை இருக்கின்றது

(வவுணதீவு எஸ். சதீஸ்)

கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் சுற்றறிக்கைக்கு அமைவாக, கொவிட் கட்டுப்பாடுகளை கடுமையாக விதிக்கவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. என மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

## அட்டாளைச்சேனையில் 9 பேருக்கு தொற்று

(நமது நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர்.

02 ஆம் பக்கத்தில்...

## 5 பாடசாலைகளில் 78 மாணவர்கள் தனிமைப்படுத்தலில்

(ஊர்காவலன்)

மினுவாங்கொடை கல்வி வலயத்தில் 5 பாடசாலைகளில் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக மினுவாங்கொடை கல்வி வலய பணிப்பாளர் வஜீர ரணராஜா தெரிவித்தார்.

இந்தக் கல்வி வலயத்தில் 10 மாணவர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## பாடசாலைகள் மூடல்; தீர்மானம் எடுக்கப்படவில்லை கல்வி அமைச்சு தெரிவிப்பு

(காந்தன்)

பாடசாலைகளை மூடுவதற்கான எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை. அதிபர்தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள பாடசாலை மட்ட குழுக்கள் பாடசாலையின் செயல்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்குமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்று

02 ஆம் பக்கத்தில்...

## காதல் ஜோடிக்கு எமனான ரயில் காதலி மரணம்:காதலன் படுகாயம்

ஜாஎல வடக்கு குடஹகபொல ரயில் கடவையை கடப்பதற்கு முயன்ற காதல் ஜோடியின் மீது ரயில் மோதியதில், சம்பவ இடத்திலேயே காதலி மரணமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த காதலன், ராகம வைத்தியசாலையின் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன்

02 ஆம் பக்கத்தில்...


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

## 5 பாடசாலைகளில் 78 மாணவர்கள் தனிமைப்படுத்தலில்

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக இனங் காணப்பட்டுள்ள அதேவேளை, 14 பெற்றோர்களும் ஆசிரியர்கள் பலரும் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இந்தக் கல்வி வலயத்தில்78 மாணவ,மாணவிகள் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மட்டு.வில் 100 பேருக்கு நடந்த திடீர்

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு கல்லாறு கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் ஆசிரிய மாணவர்களே இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் மேலும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்துள்ளதையடுத்து திடீர் அன்ரிஜன் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## அட்டாளைச்சேனையில் 9 பேருக்கு தொற்று

பரிசோதனையில் 9 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்.ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார். இதில் அட்டாளைச்சேனையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரும் பொத்துவிலில் இருவரும் அடங்குவதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவுக்குட்பட்ட மக்கள் கொரோனாவினால் பட்ட துயரை கருத்தில் கொண்டு மூன்றாம் அலை பரவாதிருக்க தேவையானசுகாதாரநடைமுறைகளைக் கைக்கொள்ளுமாறும்அவர்குறிப்பிட்டுள்ளார்.சமூகஇடைவெளிபேணல் முகக்கவசம் அணிதல் கைகளை நன்றாக அடிக்கடிகழுவிக்கொள்ளல்ஆகியசெயல்பாடுகளை கைக்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

## காதல் ஜோடிக்கு எமனான ரயில்

இந்த இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள், ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. மரணமடைந்த காதலி, தனியார் நிறுவனமொன்றில் காசாளராக கடமையாற்றுகின்றார். திருமண வைபவத்துக்கான ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்த போதே, இந்த விபத்துக்குள் சிக்கியுள்ளனர் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற ரயில் கடவையில், சிவப்பு சமிக்ஞை விளக்கு எரிந்துகொண்டிருந்துள்ளது. எனும், அந்த ரயில் கடவைக்கு, பாதுகாப்பான படலை இல்லையென பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## கட்டுப்பாடுகளை கடுமையாக்க வேண்டிய தேவை இருக்கின்றது

மாநகர ஆணையாளர் எம். தயாபரன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாநகரசபையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது மட்டக்களப்பு மாநகரசபை பிரிவில் பார்க்கின்றபோது இந்த கொவிட் 19 தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளை நாங்கள் அவ்வளவு தூரம் மேற்கொள்ளவில்லையோ என்று சந்தேகத்துடன் எண்ணத்தோன்றுகின்றது. நேற்று வர்த்தக நிலையங்களிலும் பொது இடங்களிலும் கூடும் பொதுமக்கள் சமூக இடைவெளியை பின்பற்றாமல் கூட்டம் கூட்டமாக நிற்பதனை அவதானிக்கமுடிந்தது. இது எமக்கும் இந் நாட்டிற்கும் ஒரு பாரதூரமான செயற்பாடாகும் எனவும் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வர்த்தக நிலையங்களில் ஒன்றுகூடும் பொதுமக்கள் அவர்கள் எந்தவிதமான முகக்கவசம் அணியாமலும் அல்லது சரியான முறையில் அணியாமலும், சமூக இடைவெளியை பின்பற்றாமலும் வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்வதை காணமுடிந்தது. அதேபோன்று பொது இடங்களான பஸ் நிலையம், பூங்காக்கள், ஆலயங்களில் ஒன்றுகூடும் மக்கள் இந்த விடயத்தை கவனத்தல் கொள்ளாமல் ஒன்றுகூடுகின்றனர். எனவே இந்தவகையில் ஒன்றுகூடுவதால் கொவிட் 19 தொற்றுவதற்கு சாதகமான நிலையை தோற்றுவிக்கும். சுகாதாரப் பிரிவினரின் தகவலின்படி, மட்டக்களப்பிலே அண்மைக்காலமாக கொவிட் 19 தொற்று அவதானக்கப்பட்டிருக்கின்றது. அதில் சில மாணவர்களையும், அரசாங்க உத்தியோகத்தர்களையும், ஆசிரியர்களையும் பாதித்திருப்பததாக தகவல்கள் கூறுகின்றன.

எனவே இந்த நிலையிலே நாங்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றவேண்டிய தேவை இருக்கின்றது. எங்களுடைய இந்த புதிய சுற்றறிக்கையின்படி நாங்கள் பொது மக்களை அனாவசியமாக வீடுகளில் இருந்து வெளியே வரவேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம். குறிப்பாக ஒரு வீட்டில் இருந்து இரண்டுபேர் மாத்திரம் வருவது போதுமானதாக இருக்கும் இன அரசாங்கம் கருதுகின்றது.

நாங்கள் அவதானித்ததன்படி அதிகமான மக்கள் வர்த்தக நிலையங்களிலே ஒன்றுகூடுகின்றனர் அவர்கள், இந்த கொவிட் தொற்று ஏற்பட்டிருக்கின்றது நாடு முடக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் எனும் வதந்திகளின் அடிப்படையில் அவ்வாறு ஒன்று கூடுவதற்கான காரணமாக இருக்கலாம், ஆனால் அரசாங்கத்தின் அறிக்கைகளின்படி அவ்வாறு நாட்டை முடக்குவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை ஆகையால் கடைகளில் முண்டியடித்துக்கொண்டு மக்கள் பொருட்களை கொள்வனவு செய்யவேண்டிய தேவை இல்லை. வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இதன்மூலம் சில அறிவித்தல்களை விடுக்கின்றோம். சகல வர்த்தக நிலையத்தில் 50 வீதத்திற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களை அனுமதிக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு 50 வீதத்திற்கு மேல் வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்பட்டால் அந்த அந்த வர்த்தக நிலையத்தின் உரிமம் இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை மாநகர சபை மேற்கொள்ளும். மக்கள் வரிசையில் நின்று பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்கவேண்டியதுடன் கைகளை கழுவி, முகக்கவசம் சரியாக அணித்து வருபவர்களை மாத்திரம் இதற்கு அனுமதிக்க வேண்டும்.

மற்றும் மூடப்பட்ட அரங்குகள், கேளிக்கை நிலையங்கள்,சிறுவர் பூங்காக்கள், நீச்சல் தடாகங்கள் போன்றவை மூடப்படுகின்றது இந்த இடங்களுக்கு சிறுவர்களை அழைத்துவரவேண்டாம் எனவும் அறியத்தருகின்றோம்.

அதேபோன்று திருமணத்திற்காக 150 பேருக்கு மேல் அனுமதிக்கப்படமாட்டார்கள் அதுவும் சுகாதார பரிசோதகர்களின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறவேண்டும். அதேபோன்று ஆலயங்களின் உற்சவங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட மக்கள் மாத்திரம் பொது சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி போன்றோரின் கண்காணிப்பின்கீழ் நடைபெறவேண்டும்

இந்த கொவிட் 19 அலை வளர்ச்சியடைந்த வைரஸ் ஆக காணப்படுவதாக தகவல்கள் கூறுகின்றது. எனவே நாங்கள் எங்களது சமூகத்திலே இதை பரவவிடாமல் தடுக்கவேண்டுமாக இருந்தால் எங்கள் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தல்களை பின்பற்றவேண்டியது மிக அவசியமாக இருக்கின்றது. எனவே வீண் வதந்திகளை நம்பவேண்டாம் எமது பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்திக்கொள்வோம். என அன்பாக கேட்டுக்கொள்கின்றேன் எனஅவர் தெரிவித்தார்.

## திருமலையின் அனைத்து பாடசாலைகளுக்கும்

திருகோணமலை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் மறு அறிவித்தல் வரும் வரை மூடுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

ஆளுநர் மாகாண கல்வி செயலாளர் கல்வி பணிப்பாளர் கலந்து கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை திருகோணமலை கல்வி வலயத்திற்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளும் மூடப்படுகிறது.

இது பற்றி வலயக்கல்வி பணிப்பாளர் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

அதிபர்கள் மாணவர்களின் இலத்திரனியல் முறை மூலமான கல்வி நடவடிக்கை பற்றி அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## திருமலையில் ஹெரோயின் போதைப் பொருளுடன்

சந்தேக நபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கைது நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே பகுதியை சேர்ந்த கஞ்சா நஸ்லிம் என்றழைக்கப்படும் ஜுனைதீன் சறுக் (38வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது ஹொரவ் பொத்தானை கோமரங்கடவல, மொரவெவ, புல்மோட்டை போன்ற பகுதிகளுக்கு ஹெரோயின் போதைப் பொருட்களை விற்பனை செய்து வருவதாக வலான போதைப்பொருள் மற்றும் மோசடி தடுப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து குறித்த சந்தேக நபரின் கடையை சோதனையிட்ட போது அவரிடமிருந்து 40 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை மொரவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிசார் தெரிவித்தனர்.

## ரிஷாட் பதியுதீனின் கைது நீதிக்கு விரோதமானது

ரியாஜ் பதியுதீனுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாதென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பொறுப்புடன் கூறுவதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு, கொழும்பில் இடம்பெற்ற போது, கட்சியின் தவிசாளர் சட்டத்தரணி அமீர் அலி, சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி என்.எம்.சஹீட், பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப், செயலாளர் சுபைர்தீன், சட்ட விவகாரப் பணிப்பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினருமான பாயிஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போது, கட்சியின் தவிசாளர் அமீர் அலி கருத்துத் தெரிவிக்கையில்,

அநீதியான முறையில் இந்தக் கைது இடம்பெற்றிருக்கின்றது. ஜனநாயக முறைப்படி பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரு கட்சியின் தலைவராக இருக்கும் ரிஷாட் பதியுதீன், இந்த நாட்டின் சிறுபான்மை சமூகம் ஒன்றின் தலைவராகவும் விளங்குகின்றார். அவர் இவ்வாறு அருவருப்பாகவும் அசிங்கமாகவும் கைது செய்யப்பட்டிருப்பது ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்குகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட வேண்டுமானால், சபாநாயகரின் அனுமதி பெறப்படல் வேண்டும். அல்லது கைது செய்யப்படுவதற்கான காரணமேனும் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால், கைது செய்ய வந்தவர்கள் இவரை எப்படியாவது கொண்டுசெல்ல வேண்டும் என்பதிலேயே முனைப்பாக இருந்தனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் கூட, கொலோசஸ் நிறுவனத்துக்கு பித்தளை வழங்கியது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேதான், கட்சியின் தலைவர் ரிஷாட் இலஞ்ச ஆணைக்குழுவுக்கு கடந்த வாரம் சென்று, இது தொடர்பில் விசாரணை செய்து, உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். கடந்த காலங்களில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலும், ரிஷாட் பதியுதீனுக்கு ஈஸ்டர் குண்டுத்தாக்குதலுடன் எந்தத் தொடர்பும் இல்லையென தெரிவிக்கப்பட்டது. அப்போதைய பதில் பொலிஸ்மா அதிபரும், தற்போதைய பொலிஸ்மா அதிபருமான சி.டி.விக்ரமரத்னவே இவ்வாறு எழுத்துமூலம் அறிவித்தார்.

கொலோசஸ் நிறுவனத்துக்கு பித்தளை வழங்கும் விடயத்தில், அப்போதைய ஜனாதிபதி செயலகமும் பாதுகாப்பு அமைச்சும் சிபாரிசுக் கடிதங்கள் வழங்கியிருந்த நிலையிலும், ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த திறமையான அமைச்சர் ஒருவரின் கீழிருந்த நிறுவனம் ஒன்றின் செயல்பாட்டுக்காக தலைவர் ரிஷாட் பழிவாங்கப்பட்டுள்ளார்.

இவரின் அவசர அவசரமான நடுநிசிக் கைது யாரை திருப்த்திப்படுத்துவதற்காக? என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கின்றது.

பொதுவாக இந்த விவகாரத்திலே முக்கியமான விடயம் ஒன்றை நாட்டு மக்களுக்கு தெரிவிப்பேன் என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் தெளிவாகக் கூறினார். நாட்டிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் அவரின் வார்த்தையை எதிர்பார்த்திருந்தோம். இந்த நாட்டிலே அரசியல் தேவைப்பாட்டுக்காக, இந்த தாக்குதல் இடம்பெற்றதாக அவர் தெளிவாகக் கூறினார். இந்தத் தாக்குதலின் பின்னணியுள்ள சூத்திரதாரிகள் யார்? என்பதையும், இந்தத் தாக்குதல் என் நடாத்தப்பட்டது? என்பதையும் வெளிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு கர்தினாலுக்கு எவ்வாறு இருக்கின்றதோ, முஸ்லிம் சமூகத்துக்கும் அவ்வாறான தேவைப்பாடு இருக்கின்றது. இந்த நிலையில், கர்தினாலை திருப்திப்படுத்துவதற்காக எமது தலைவர் கைது செய்யப்பட்டாரா? என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தலைவர் ரிஷாட் பதியுதீனின் சகோதரர் ரியாஜ் பதியுதீன், சுமார் ஐந்தரை மாதங்களின் பின்னர், தடுப்புக்காவலில் இருந்து சி.ஐ.டியினரால் விடுவிக்கப்பட்ட போது, 'ஏதாவது டீல் இருக்கின்றதா' என்றும் கர்தினால் கேட்டார்.

ஆனால், அரசாங்கத்துக்கும் எமது கட்சிக்கும் இடையில் எந்த டீலும் இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றோம். எமது தலைவரின் கைது சட்டவிரோதமானது. ஜனநாயகத்துக்கு விரோதமானது. இந்தக் காட்டுமிராண்டித் தனமான அரசியல் சித்தாந்தம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற பிரார்த்தனையையே எமது கட்சி அபிமானிகள் இந்த புனித ரமழானில் இறைவனிடம் கேட்க வேண்டும், அதேபோன்று இதே பிரார்த்தனையை இந்த நாட்டு முஸ்லிம்களும் கேட்க வேண்டும்.

இந்த ஊடக சந்திப்பில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் கருத்து தெரிவித்த போது,

எமது தலைவர் ரிஷாட் பதியுதீன் கைது செய்யப்பட்ட முறைமைகள் சரியான விதத்தில் மேற்கொள்ளப்படவில்லை. அறிக்கையில் கூறப்பட்டவாறு இதுவரை எந்தவொரு நபருக்கும் எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாத நிலையில், ரிஷாட் பதியுதீன் மாத்திரம் அறிக்கையில் கூறப்பட்டமைக்கு மாற்றமாக கைது செய்யப்பட்டுள்ளார். இது அரசியல் நோக்கம் கொண்டதான கைது என அப்பட்டமாகத் தெரிகின்றது.

அவர் திட்டமிட்ட அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். 'ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகள் ரிஷாட் பதியுதீனோ அல்லது வேறு எந்த முஸ்லிமோ அல்ல' என பாராளுமன்ற விவாதங்களில் இருந்து துலாம்பரமாக தெரிகின்றது. சூத்திரதாரி வேறு யாரோ என்பதுவும் எல்லோருக்கும் தெரியும். இது சிங்கள சமூகமும் இதை உணரத் தொடங்கியுள்ளது. ரிஷாட் பதியுதீன் மீது எத்தனையோ குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, எல்லாமே புஸ்வாணம் ஆகிவிட்ட நிலையில். இப்போது காரணமில்லாமல் கைது செய்யப்பட்டுள்ளார். என அவர் தெரிவித்தார்.




Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

## பாடசாலைகள் மூடல்; தீர்மானம் எடுக்கப்படவில்லை

பரவல் அதிகரித்து வரும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மே மாதம் 31 ஆம் திகதி வரை அமுலாகும் வகையில் மூன்றாம் கட்ட முன்னெச்சரிக்கையடன் சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த பல்கலைக்கழகம் உள்ளடங்கலாக உயர்கல்வி நிறுனங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், தனியார் வகுப்புகளும் மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சுகாதார வழிகாட்டல்களின்படி, பாடசாலைகள், பாலர் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் என்பன 50 வீதத்தினரை மாத்திரம் கொண்டு இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை தற்போதைய கொவிட் அச்சம் காரணமாக பெற்றோர் தங்களது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கு தயங்குவதால் பாடசாலைகளை மூடுமாறு பாடசாலை அதிபர்கள் சங்கம் ஏற்கனவே கல்வி அமைச்சுக்கு கோரிக்கை விடுத்திருந்தது. கல்வி அமைச்சு வெளியிட்டிருந்த சுற்றறிக்கையின்படி புத்தாண்டு காலத்துக்கு பின்னர் பாடசாலைகள் திறக்கப்பட்டாலும் மாணவர்களின் வருகையில் சரிவு நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக க.பொ.த. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படுமெனவும் திட்டமிட்டுள்ள ஏனைய பரீட்சைகளை ஒத்திவைப்பது மற்றும் வேறு திகதிகளுக்கு மாற்றுவது தொடர்பில் எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையென பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தற்போது வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படையில் சகல பாடசாலைகளும் தொடர்ச்சியாக இயங்குமென்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையால் சமூகத்திற்கு ஏற்படும் அழிவுகளை தடுக்க ஒருங்கிணைந்த வழிகளை கையாள வேண்டும்



(ரக்ஸனா)

போதைப் பொருளினால் சமூகத்திற்கு ஏற்படும் அழிவை நாம் தடுக்க வேண்டுமாகில் ஒருங்கிணைந்த பல வழிகளைக் கையாள வேண்டியிருப்பதாக ஏறாவூர் நகர பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பாத்திமா ஷாபிறா வஸீம் தெரிவித்தார்.

பிரதேசத்தில் காணப்படும் போதைப் பொருள் தாக்கம் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

இது விடயமாக தொடர்ந்து தெரிவித்த அவர் போதைப் பொருள் ஆக்கிரமிப்பு என்பது ஒட்டு மொத்த மனித குலத்திற்கே அழிவு தரும் ஒன்றாக மாறிவிட்டிருக்கிறது.

அதனைத் தடுக்க வேண்டுமென்றால் அடிப்படையில் மூன்று வழிகளைக் கையாள வேண்டும்.

முதலில் அதன் விநியோக வலைப்பின்னலை தகர்க்க வேண்டும். அடுத்து ஏற்கெனவே போதைப் பொருளுக்கு அடிமையாகி இருப்பவர்களை மருத்துவ சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக உதவ வேண்டும். மூன்றாவதாக மேலும் புதிய போதைப் நுகர்வாளர்கள் உருவாகாமல் தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்த மூன்று ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களையும் ஏக காலத்தில் சமாந்தரமாகச் செய்ய வேண்டும் அப்பொழுதுதான் போதைப் பொருளின் தாக்கத்திலிருந்து மனித சமூகத்தை விடுவிக்க முடியும்.

போதைப் பொருள் தடுப்பு விடயத்தில் பிரதேச ரீதியாக சில கருமங்களை பொறுப்பு வாய்ந்த தரப்பினர் மேற்கொண்ட வண்ணமே உள்ளார்கள். ஆயினும் இந்தக் கருமங்கள் இன்னமும் காத்திரமான முறையில் செய்யப்படுதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அத்தியவசியமாகத் தேவைப்படுகின்றது.

போதைப் பொருள் விற்பனையாளர்களைத் தேடிப் பிடிப்பதில் பொலிஸார் தமது கடமைகளைச் செய்து கொண்டு வருகின்றார்கள்.

அதேவேளை பாதிக்கப்பட்டவர்களுக்குரிய மருத்துவ உளநல உதவிகளை வழங்குவதில்; சுகாதாரத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மருத்துவ உதவிகளைப் பெறுவதற்காக வைத்தியசாலைகளுக்குக் கொண்டு சேர்ப்பிப்பதில் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மருத்துவ உதவிகளை நாடுவதற்காக கொண்டு சேர்ப்பிப்பதை யார் செய்வது என்பதில் சுகாதாரத் துறையினருக்கு பெரும் சவால்கள் உள்ளன.

வைத்தியர்கள் வீடுவீடாகச் சென்று பரிசோதனை செய்து போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை வைத்தியசாலைகளுக்கு கொண்டு சேர்ப்பிக்க முடியாது.

சுகாதாரத் துறையினருக்கு கிடைக்கப் பெறும் தகவல்களைக் கொண்டு வீடுகளிலுள்ள போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை அடையாளம் கண்டாலும் அவர்கள் தங்களுக்கான வைத்திய சேவைகளைப் பெறுவதை சம்பந்தப்பட்ட நபர்கள் விரும்ப மாட்டார்கள். சிலவேளை அந்த நபரது குடும்பமும் விரும்பாத நிலைமையும் உள்ளது.

இந்த விடயத்தில் பொதுமக்களும் சமூக அக்கறையுள்ளோரும் அதிகாரமுள்ள பொலிஸ் தரப்பும் உதவ வேண்டும். அவ்வாறு நடந்தால் அது போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதில் வெற்றியாக அமையும் என்றார்.

# நீதியான விசாரணை வேண்டும்

## அட்டன் ஆலயத்தில் விசேட வழிபாடு





க.கிஷாந்தன்

இலங்கையில் 2019 வருடம் இடம்பெற்ற தற்கொலை குண்டுதாக்குதல்களில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூர்ந்தும், நீதியான விசாரணை வேண்டும் என பதாதைகளை காட்சியப்படுத்தியவாறும் அட்டன் திருச்சிலுவை ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

அட்டன் பிரதேசத்தில் ஆசிரியர் குடும்பம் உட்பட பலரும் இந்த குண்டு தாக்குதலில் உயிரிழந்தனர். அவர்களின் குடும்பஸ்தர்களும் இந்த வழிபாடுகளில் ஈடுப்பட்டிருந்தனர்.

அட்டன் திருச்சிலுவை ஆலயத்தில் அருட்தந்தை தலைமையில் இருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி, மெழுகுவர்த்தி ஏற்றி உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தனர். இதில் அட்டன் வாழ் பகுதி கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 2019ம் வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் 277 பேர் உடல்சிதறிப் பலியானார்கள். 477 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மண்முனைப் பற்றில் இடம்பெற்ற தொழிற் சந்தை

(ரக்ஸனா)

மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு நேர்முக பரீட்சையினூடாக வேலைவாய்ப்பினையும், பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்குமான பிரதேச தொழிற் சந்தை மண்முனைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் இடம்பெற்ற இத்தொழிற் சந்தை நிகழ்வை மண்முனைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் திருமதி லோகினி பங்கேற்று ஆரம்பித்து வைத்தார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திவாகரன் செல்லத்துரை, மண்முனைப்பற்று பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவானி ஆரையம்பதி விதாதா வளநிலைய விஞ்ஞான தொழிநுட்ப உத்தியோகத்தர் திருமதி சுனிதா அகிலன் களகூட்டிணைப்பாளர் சண்முகநாதன் ரகுதாஸ் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கைத்தொழில் அமைச்சின் அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஒருங்கிணைந்து ஒழுங்குபடுத்தல்களை மேற்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டமனித வள அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்விலே மண்முனைப்பற்று பிரதேசத்தில் இயங்கும் அனைத்து தனியார் நிறுவனங்களும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.





# லிந்துலை - அக்கரப்பத்தனை டயகம பிரதான வீதியை புனரமைக்க நடவடிக்கை

(க.கிஷாந்தன்)

நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப்பட்ட லிந்துலை - அக்கரப்பத்தனை டயகம பிரதான வீதியை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் நடவடிக்கை மூலம் அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராஜங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமைய லிந்துலை - அக்கரப்பத்தனை டயகம பிரதான வீதியில் முதற்கட்டமாக சுமார் 6.5 கிலோ மீற்றர் தூரம் 404 மில்லியன் ரூபா செலவில் பாதையினை அகலப்படுத்தி காபட் இட்டு புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





நாட்டை கட்டியெழுப்பும் செளபாக்கிய தொலைநோக்கு எனும் தொனிப்பொருளில், 100,00 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி செய்யும் தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தில் பல வீதிகள் காப்பட் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் லிந்துலை - டயகம வீதியை காப்பட் செய்து அபிவிருத்தி செய்வதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன் பங்கேற்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேற்படி முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், நகர சபை, பிரதேச சபை தலைவர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஊடகங்களின் புனிதத்தன்மை பேணப்பட வேண்டும்'



ஊடகங்களின் புனிதத்தன்மை பேணப்பட வேண்டுமே தவிர மாசுபட வைக்கக் கூடாது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இணையத்தளங்களும் இன்றைய காலகட்டத்தில் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. சிலர் இதை முறையற்ற விதத்தில் தவறாக பயன்படுத்துவது சமூகத்திற்கு நல்லதல்ல. சிலருக்கு இது தான் வாழ்வாதாரம். சிலருக்கு பொழுதுபோக்கு! சிலருக்கு வரைவிலக்கணமின்றி எல்லோர் தலையிலும் குட்டிப் பார்ப்பது! சிலர் இவற்றை உபயோகித்து சிலரை தூக்கி வைப்பதும், வேறு சிலரை காலில் போட்டு மிதிப்பதும் வழக்கமாகிவிட்டது. சுய மகிழ்ச்சிக்காக ஒருவர் எதையும் செய்யலாம். ஆனால் மற்றவர்களை துன்பப்படுத்துவது. நியாயமற்றதாகும். மக்களுக்கு சரியான நடுநிலையான செய்திகளை வழங்குவதே ஊடகங்களின் தர்மமாகும்.

தப்பான வழிநடத்தலால் பல்லாயிரக்கணக்கான இலட்சியவாதிகளை பலிகொடுத்துள்ளோம். நான் உயிருள்ள வரை பணத்துக்கோ அல்லது பதவிக்கோ அலையமாட்டேன். அத்துடன் எத்தகைய துரோகத்தை எவருக்கும் செய்யமாட்டேன். இதை உறுதியாக மக்கள் நம்பலாம். அரசியலை தொண்டாகவும், நம் கடமையாகவும் செய்கின்றேனே அன்றி வியாபாரமாக அல்ல என்பதனை அனைவரும் அறிய வேண்டும். பொய்ப் பிரச்சாரங்கள் மூலம் எனது சேவையை மக்கள் இழந்து விடாது காக்க வேண்டிய பொறுப்பு சகல ஊடகங்களுக்கும் உண்டு. முப்பது வருடங்களாக நான் படும் அவமானத்திற்கு விரைவில் ஓர் முடிவு வர வேண்டும் என ஆண்டவனை வேண்டுகின்றேன்.

நான் அரசியலில் என்றும் பிழையான வழியை பின்பற்றியவனும் அல்ல, திட்டமிட்டு எதையும் செய்தவனும் அல்ல, எவர் ஏற்றாலும் சரி ஏற்காவிட்டாலும் சரி உண்மையாதெனில் ஒரு சிலரின் சுயநலப்போக்கால் எமது பிரச்சனைகள் நீடித்துக்கொண்டு போய்விட்டது. தமிழினத்திற்கு அத்தியாவசியமான ஒரு தேவை ஏற்பட்ட போது எதுவித தப்பும் கூறமுடியாத தலைவர்களாகிய தந்தை செல்வநாயகம், தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், மலையக தலைவர் தொண்டமான் ஆகியோர் இணைந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி தான் தமிழர்களின் தேசிய அமைப்பு என்ற பெயரை பெற தகுதி பெற்றதாகும்.

தனிப்பட்ட முறையில் எவரேனும் அல்லது நடைமுறையில் இயங்குகின்ற அல்லது ஏதாவது அரசியல் கட்சிகளை குறிவைத்து நான் எதையும் கூறவில்லை. பல சந்தர்ப்பத்தில் தீர்வு வந்து கதவில் தட்டியதை அனேகர் அறியமாட்டீர்கள்.

என்னைப்பற்றி ஏறக்குறைய 30 ஆண்டுகள் எதுவிதத்தில் நியாயப்படுத்த முடியாதவிதத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிக மோசமாக செய்யப்பட்ட பிரச்சாரம் தான் நீங்கள் அறிந்ததுண்டு. உண்மை அதல்ல. சில உண்மையான விடயங்களை இக்கட்டத்தில் சொல்லித் தான் ஆக வேண்டும்.

பொய், களவு, ஏமாற்று போன்ற எதுவித குணாதிசயங்கள் கடுஅளவும் இல்லை என்பதால் நான் எழுதப் போவது முற்று முழுதாக உண்மையே அன்றி எதுவித குளறுபடியுமில்லாமல் மக்களாகிய நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்பது மட்டுமல்ல உங்கள் சந்தேகங்களை என்னுடன் பேசித்தீர்த்துக்கொள்ளலாம்.

2004ம் ஆண்டு பொதுத்தேர்தலுடன் விடுதலைப்புலிகள் உட்பட சகலரின் ஒத்துழைப்புடன் எமது பிரச்சனை முற்றுமுழுதாக இல்லாவிட்டாலும் பெருமளவில் தீர்க்கக்கூடிய அரிய ஒரு சந்தர்ப்பம் வந்ததை அனேகர் அறியமாட்டீர்கள். அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் இருக்கும் வரை பயபக்தியுடன் செயற்பட்ட தலைவர்களில் சிலர் தான் தோன்றித்தனமாக தம் இஸ்டப்படி நடந்தமையால் என்றோ பிரச்சனை தீர்ந்து பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் காப்பாற்றியிருக்க முடியும். யார்? யார்? என்ன செய்தார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்பவில்லை. இன்று தீவிரமாக இயங்குவதாக காட்டிக்கொள்ளும் தலைவர்கள் தம் மனசாட்சியை தொட்டு தம்மை தாமே கேட்க வேண்டிய கேள்விகள் பல உண்டு.

அனேகர் நினைப்பது போல் பல கட்சிகளின் முன்னனி தலைவர்கள் தாம் வகிக்கும் பதவிகளுக்கு தகுதியற்றவர்களாவர். தந்தை செல்வநாயகம், தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம், மலையக தலைவர் தொண்டமான் அவர்களால் உருவாக்கப்பட்ட தேசிய கட்சிக்கு நடந்தது என்ன? அதை ஒழித்தவர்கள் யார்? மிக இலகுவாக தட்டிக்கேட்க ஆளில்லாமையால் என் மீது பழி சுமத்தி தாம் தப்பிக் கொண்டனர். ஆனால் பல விடயங்கள் சம்பந்தமாக என்னால் விளக்கம் தந்திருக்க முடியும். தப்பிக்க முடியும். எமக்குள் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இக் கட்டத்தில் நான் எவர் மீதும் குற்றம் சுமத்தவில்லையே அன்றி, எதுவித குற்றமும் நான் செய்தவனல்ல.

தமிழர் விடுதலைக் கூட்டணி முற்று முழுதாக தடம்புரண்டது 2004ம் ஆண்டு 2ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில். வாக்டாளர்களின் சகல அடிப்படை உரிமைகள் அத்தனையும் முற்றுமுழுதாக மீறப்பட்டது அத் தேர்தலில் தான். இந்த உண்மை வெளிக்கொண்டரப்படாமையே எம் இனத்தின் பலதரப்பட்ட இழப்புகளுக்கு காரணமாக அமைந்தது. எமது தலைவர்கள் விடுதலைப்புலிகளையும், மாணவர்களையும் உபயோகித்து பெரு வெற்றி ஈட்டியதில் விடுதலைப்புலிகளின் அழிவிற்கும் காரணமாக அமைந்தனர்.

அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் இருக்கும் வரை பெட்டிப்பாம்பாக இருந்தவர்கள் சுயரூபத்தை காட்ட தொடங்கினர். பலருக்கு தகுதியிருந்தும் ஒரு நபர் ஒற்றுமை கருதி அமிர்தலிங்கம் அவர்களின் இடத்திற்கு தேசியப்பட்டியலில் நியமிக்கப்பெற்றார். அதன் பின் அதே நபர் மீண்டும் தேசியப்பட்டியலில் நியமிக்கும்படி அடம்பிடித்தார்.

நியமன உறுப்பினராக ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டிருந்த நீலம் திருச்செல்வம் அவர்களுக்கு ஐந்து பக்கத்தில் கடிதம் எழுதி தன் பதவியை இராஜினாமா செய்து மீண்டும் அதே நபரை நியமிக்கும்படி வேண்டியிருந்தேன். துரதிஸ்டவசமாக அவர் கொல்லப்பட்டபின் அதே நபரை பலரின் எதிர்ப்புக்கு மத்தியில் நானே முன்நின்று மீண்டும் அவரை நியமன உறுப்பினராக தெரிவு செய்தேன். அந்த நேரத்தில் இவரிலும் கூடிய தகுதியுடையவர்கள் பலர் இருந்தனர். தொடர்ந்து வந்த பாராளுமன்ற தேர்தலில் முதல் வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்று அடம்பிடித்தார். நியாயமற்ற அவரின் கோரிக்கைக்கு எவரும் செவிசாய்க்கவில்லை.

பல தந்திரங்களை கையாண்டு போட்டியிட்டு என்னிலும் குறைந்த வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தை பெற்ற அவர் அதை ஒரு பெரும் தோல்வியாக எடுத்துக்கொண்டு பல நாசவேலைகளில் ஈடுபட்டார். அத் தேர்தலில் தான் தமிழ் பிரதேசத்தில் ஜனநாயகம் தடம்புரண்டதாகும்.

இந்த உண்மையை பொதுமக்களுக்கு ஊடகங்கள் தெரியப்படுத்தியிருந்தால் இனப்பிரச்சனை என்றோ தீர்ந்திருக்கும். பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரும், உடமையும் காப்பாற்றப்பட்டிருக்கும். அடுத்து வரப்போவது தமிழ் தேசிய கூட்டமைப்பு 2004ம் ஆண்டு தேர்தலின் போது 22 அசனங்களை அபூர்வமாக கைப்பற்றியது எவ்வாறு? ஜனநாயக உலகை அதிரவைத்த வரலாறு தொடரும். அதில் இது முதல் விடயமாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் 22 பேர் எவ்வாறு தெரிவானார்கள் என்ற உண்மையை நன்கு அறிந்திருந்த ஊடகங்கள் வெளிக்கொண்டுவராமையே தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு பெரும் சலுகையாக அமைந்தது. அன்று வெளியிடத் தவறியமைக்கு நியாயப்படுத்தக்கூடிய காரணம் இருந்திருப்பின் இந்த காலகட்டத்திலாவது வெளியிட்டிருக்கலாம்.

## கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொதுமக்களுக்காக விடுத்துள்ள அறிவித்தல்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளதால் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொதுமக்களுக்கான அறிவித்தல் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இவ்வறிவித்தலை கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட COVID பரவல் அசாதாரண சூழ்நிலை காரணமாக பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்தவுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1. சமய அனுஷ்டானங்களின் போது கலாச்சார திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நடைமுறைகளை கட்டாயம் கடைபிடித்தல் வேண்டும்.

2. மே 31 அல்லது மறு அறிவித்தல் வரை தனியார் வகுப்புகள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதை முற்றுமுழுதாக தவிர்த்தல் வேண்டும்.

3. இப்தார் நிகழ்வுகள், பொது நிகழ்வுகள், களியாட்டங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் ஒன்றுகூடல்களை முற்றுமுழுதாக தவிர்த்தல் வேண்டும்.

4. வீதியோரக் கடைகள் மற்றும் பண்டிகை கால விசேட கடைகளை சனநெரிசலற்ற இடத்தில் அமைத்தல் அல்லது அவற்றில் இருந்து விலகிக் கொள்ளல் வேண்டும்.

5. தேவையற்றதும் அனாவசியமானதுமான வெளி பயணங்களை முற்றுமுழுதாக தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

6. வர்த்தக நிலையங்கள் விசேடமாக பண்டிகைக்கால கடைகள் மற்றும் வீடுகளில் வர்த்தகம் செய்வோர் மற்றும் நுகர்வோர் சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும் இல்லாவிடில் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு வர்த்தக நிலையங்கள் நீதிமன்ற அனுமதியுடன் பூட்டப்படும்.

7. வாராந்த சந்தைகள் மற்றும் அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் நுகர்வோர் என அனைவரும் சுகாதார நடைமுறைகளை தொடர்ச்சியாக பேண வேண்டும்.

8. ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப பொது போக்குவரத்து பேருந்துகளில் பயணிகளை ஏற்றுதல் வேண்டும் எனவும் இவ்வறிவித்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேச வக்கில்லாத சிலர் மலையக பல்கலைக்கழகம் எங்கு என கேட்கிறார்கள்;ஜீவன் தொண்டமான்

கிஷாந்தன்



மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த காலங்களில் பேச வக்கில்லாத சிலர் இன்று மலையக பல்கலைக்கழகம் எங்கு என கேட்பதாக இ.தொ.கா பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

லிந்துல - டயகம பிரதான வீதியின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்

1000 ரூபா சம்பள விடயம் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதால் எம்மால் எதனையும் செய்ய முடியாது. மே 5 ஆம் திகதி தீர்ப்பு வந்த பின்னரே எம்மால் பேச்சுவார்த்தைகளை நடத்த முடியும். இ.தொ.காவே சம்பள பிரச்சினையை நீதிமன்றம் கொண்டு சென்றதாக தற்போது சிலர் தூண்டி விடுகின்றனர். அதற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அதாவது நீதிமன்றத்திற்கு சென்றாவத 1000 ரூபாவை பெற்றுக்கொடுத்தது.


இ.தொ.காவின் வெற்றியாகும். நாம் இதை செய்யவில்லை. இ.தொ.கா சொன்னதை செய்தது அதாவது சம்பள நிர்ணய சபையின் ஊடாக 1000 ரூபா வழங்கப்பட்டுள்ளது. கம்பனிகளே நீதிமன்றத்தை நபடியள்ளனர். அது அவர்களின் உரிமையாகும். இது அடிப்படை உரிமை ஆனால் இதில் சிலர் அரசியல் இலாபம் தேடுகின்றனர். அதனை தவிர்ப்பது நல்லது எதிர்வரும் ஓரிரு மாதங்களில் இராத்தல் பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு முடிவு கிடைக்கும். பாராளுமன்றத்தில் ஒருவர் பல்கலைக்கழகம் என கேட்டார்.

கடந்த 5 வருடமாக 1000 ரூபாவை பற்றி பேவக்கில்லாத, திராணி இல்லாதவர்கள் இப்போது பல்கலைக்கழகம் குறித்து பேசுகின்றனர் அதாவது 5 வருடங்களுக்கு முன்னர் சொன்ன பல்கலைக்கழகம் எங்கு என கேட்க திராணியில்லாதவர்கள் இப்போது பேசுகின்றனர். அரசாங்கம் நுவரெலியாவில் பல்கலைக்கழகம் அமைக்க கல்வியமைச்சின் கீழ் 300 - 400 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதனை வரவு செலவு திட்ட அறிக்கையில் பார்க்கலாம் இப்போது 20 கிலோ 22 கிலோ இறாத்தல் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நான் சொல்லியே கம்பனிகள் இவ்வாறு இறாத்தலை கூட்டுவதாக சிலர் கூறுகின்றனர். வாங்கும் சந்தா பணத்துக்கு இவ்வாறு வரும் தொழிற்சங்க பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்;க வேண்டியது எனது கடமை. ஆகவே என் மீது கொண்டுள்ள அக்கறையை விடுத்து மக்களுக்காக கொழும்பில் இருந்து களத்துக்கு வந்து சேவை செய்யுமாறு கேட்டக் கொள்கின்றேன்

## சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 97வது துறவற தின விழா

(வி.ரி.சகாதேவராஜா)



உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் 'முத்தமிழ் வித்தகர்' சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 97 ஆவது துறவறதினவிழா இன்று திங்கட்கிழமை சித்ரா பௌர்ணமியன்று சுவாமிகள் பிறந்த காரைதீவில் கொண்டாடப்படவிருக்கிறது.

சுவாமி விபுலாநந்த அடிகளார் 1924ஆம் ஆண்டில் இதேபோன்றதொரு சித்ரா பௌர்ணமி தினத்தில்தான் துறவறத்தை மேற்கொண்டார்.பகவான் ஸ்ரீ இராமகிருஸ்ணபரமஹம்சரின் நேரடிச்சீடரான சுவாமி சிவானந்தரிடமிருந்து துறவற ஞானோபதேசம் பெற்றுத் துறவியானார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம் இணைந்து நடாத்தும் துறவற தினவிழா, மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்த ஜீ மஹராஜ் முன்னிலையில் நடைபெறவிருக்கிறது.

இன்றைய சிறப்புதினத்தில் சுவாமி விபுலாநந்த கற்கைநிலையத்தின் ஏற்பாட்டில் பண்ணிசை மற்றும் பரதநாட்டிய வகுப்புகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகளும், அதே மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன. அதேவேளை அங்கு அறநெறி நீதிநூல்களின் கண்காட்சியும், மணிமண்டபத்தில் 'வித்தியகூடம்' எனும் நூலகமும் திறந்துவைக்கப்படவிருக்கின்றன.

இன்றைய 97ஆவது துறவறதினத்தையொட்டி இந்துகலாசார திணைக்களம் தயாரித்த சுவாமிவிபுலாநந்தரின் திருவுருவப் படம் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

## ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகோள்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பள்ளிவாசல்களில் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசல்களில் இவ்வாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய பள்ளிவாசல்களில் வணக்க வழிபாடுகளை மேற்கொள்ள வருவோர் முகக்கவசம் அணிந்து வரும்படியும் தொழுகைக்கான விரிப்புக்களுடன் வருகை தருமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, தொழுகை விரிப்பு மற்றும் முகக்கவசம் இல்லாமல் வருகை தந்து ஏனையோர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தாமல் அவ்வாறானவர்கள் பள்ளிவாசல்களுக்கு வராமல் தங்களுடைய வீடுகளில் இருந்து கொள்ளும்படி பள்ளிவாசல்களின் நிருவாகத்தினர் பொது மக்களிடம் வேண்டிக் கொண்டுள்ளனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிசாத்தின் கைதுக்கு எதிராக பேச அவர் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தைரியம் உள்ளதா?

## – இம்ரான் மஹ்ரூப் எம்.பி கடும் தொனியில் சாடல்

[ஹஸ்பர் ஏ ஹலீம்]

நிசாத்தின் கைதுக்கு எதிராக பேச அவர் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தைரியம் உள்ளதா? என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பினார். கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

நல்லாட்சி அரசாங்கத்தை குறைகூறி பாரிய பொய்களுக்கு மத்தியில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது . ஆட்சிக்கு வர அவர்கள் கூறிய அனைத்தும் பொய் என மக்கள் உணர ஆரம்பித்துள்ளதால் அதை தடுக்க தமது சர்வாதிகாரத்தை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

மக்களின் எதிர்க்கட்சியாக சீனி ஊழல், தேங்காய் எண்ணெய் மோசடி, காடழிப்பு, துறைமுக நகரம், ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட விடயங்களை மக்கள் முன் நாம் வெளிக்கொண்டு வந்தோம்.

அதில் முக்கியமாக பாத்திரமாக பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ செயற்பட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த அரசு இன்று அவரை கைதுசெய்ய முயற்சிக்கிறது. இதன் உண்மை தன்மை வெளியில் தெரிந்ததும் வழமைபோல் இனவாதத்தை தூண்டி தமது இயலாமையை மறைக்க றிசாத்தை கைது செய்துள்ளனர். இந்த கைதுகளுக்கு அஞ்சி எதிர்க்கட்சி வாயை மூடி இருக்காது

இன்று றிசாட் சார்பாக பேச அவர் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் யாருமில்லை. ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களே றிசாத்துடன் உள்ளனர். அனைவரும் இருபதுக்கு கை உயர்த்தியதால் அவர்களின் வாய்களுக்கு பூட்டு போடப்பட்டுள்ளது.இவர்களின் கட்சி தலைவர் கைது செய்யப்பட்ட போது வாய் திறக்காத இவர்களின் வாய் அரசாங்கத்துக்கு வால் பிடிக்க மட்டும் திறக்கப்படுகிறது.

கடந்த வாரம் றிசாட்டின் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தில் மிகவும் சத்தமாக நல்லாட்சி அரசுக்கு எதிராக பேசினார்.

வெட்கம் அந்த அரசில்தான் அவரும் இருந்தார். அரசால் வழங்கப்பட்ட அணைத்தது சலுகைகளையும் பெற்றுவிட்டு இன்று இந்த அரசுக்கு வால் பிடிக்க கேவலமான அரசியல் செய்கிறார்.



அவரால் முடிந்தால் அதே சத்தத்துடன் அவரின் கட்சி தலைவர் றிசாத்தின் கைதுக்கு எதிராக பேச முடியுமா? தைரியம் உள்ளதா ?

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ஈஸ்ட்டர் தாக்குதலின் இரண்டுவருட பூர்த்தி அனுஷ்ட்டிக்கப்பட்டபோது ஏற்பட்ட அமைதியின்மையில் அரச உறுப்பினர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவும் முஸ்லிம் தலைவர்களுக்கு எதிராகவும் இனவாத கூச்சலிட்டனர்.

அப்போதுகூட இருபதுக்கு வாக்களித்த உறுப்பினர்கள் எதுவும் பேசாமல் வெளியே ஓடிவிட்டனர். அப்போது கூட நாம்தான் முஸ்லிம் தலைவர்களுடன் இருந்தோம் என தெரிவித்தார்.

# கலையை கற்க ஆர்வம் ஒன்றே போதுமானது!

## காரைதீவில் நடனத்துறை முனைவர் திருமதி திருக்குமரன்

[வி.ரி.சகாதேவராஜா]

கலையைக் கற்பதற்கு செல்வமோ வசதியோ தேவையில்லை. மாறாக போதுமான ஆர்வம் இருக்கவேண்டும். சாதாரண குடும்பத்தில் பிறந்த நான் இன்று இத்துறையில் முன்னேறியிருப்பது உங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகும்.எனவே உங்களால்முடியும்.

இவ்வாறு தேசியகல்வி நிறுவகத்தில் நடனத் துறைத்தலைவராகவிருக்கும் முனைவர் திருமதி நிசாந்தராகினி திருக்குமரன் காரைதீவில் அளிக்கப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் தெரிவித்தார்.

காரைதீவு விபுலாநந்த மணிமண்டபத்தில் இவ்வரவேற்புடன்கூடிய கௌரவிப்புவிழா நேற்று நடைபெற்றது.

அங்கு நடைபெற்றுவரும் நடனப்பயிற்சிவகுப்பாசிரியை செல்வி ஜெயகோபன் தாட்சாயினி விடுத்த வேண்டுகோளையேற்று முதற்றடவையாக விபுலாந்த அடிகளார் பிறந்த காரைதீவுக்கு விஜயம்செய்தார்.

அவருக்கான வரவேற்பும் கௌரவமும் அங்கு மணிமண்டபத்தில் செயலாளர் கு.ஜெயராஜியின் ஏற்பாட்டில் ஆசிரியை திருமதி ச.அருந்தவவாணியின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

அங்கு அவருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச்சின்னமும் வழங்கப்பட்டது. வாழ்த்துரையை பணிமன்ற முன்னாள் தலைவர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

எனது மாணிவ தாட்சாயனி விடுத்த அன்புக்கு அடிபணிந்து இன்றைய செயலமர்வில் கலந்துகொள்கிறேன். சுவாமியின் பிறந்தஇடத்தை தரிசித்ததில்



பெருமகிழ்வுறுகிறேன்.

வாழ்க்கையில் நினைக்காதது நடந்துவருகிறது இந்தியாவில்மகர்தமாகாந்தி சமாதி தரிசனம் கும்பகோணத்திற்குஅப்பால்

இயேசுநாதர் மீண்டும்வந்து சென்ற இடம் மெய்வழிச்சாலை தரிசனம். சமயமற்றமதங்கடந்த இடம் முனைவர் பட்டம்பெற்றஒருவர் அடிப்படைவசதி அற்றநிலையில் ஏற்றத்தாழ்வற்ற எளிமையான வாழ்க்கைவாழும் புனித பூமி. இவற்றையெல்லாம் தரிசிக்க வாழ்நாளில் வாய்ப்பு கிடைத்தது.

அதுபோன்று விபுலாநநதருடைய தரிசனம் மகிழ்ச்சியளிக்கிறது. இதயெல்லாம் இறைவன் தீர்மானிக்கின்றவன்

நான் மட்டும் வாழவேண்டும் என்பதற்கப்பால் மற்றவர்க்கு சேவையைச் செய்துவிட்டுபோகணும்.

நான் சாதாரணகுடும்பத்திலிருந்து ஆர்வத்தினூடாக முன்னேறிவந்தவள்.

எனவே உங்களுக்கு நான் ஒரு உதாரணம். அனைவரும் என்னை அம்மா தாய் என்று பார்ப்பார்கள்.அந்தக்கலையின் மகத்துவம் அது. இந்த புனித மண்ணுக்காக எந்தச்சேவையையும் செய்யத்தயாராயிருக்கிறேன் என்றார்.

# பெண்களை பலியெடுக்கும் நுண் கடனை நிறுத்தக்கோரி

## ═ கந்தளாயில் கையெழுத்து வேட்டை ═



[எப்.முபாரக்]

பெண்களை பலியெடுக்கும் நுண் கடனை நிறுத்தக்கோரி சுதந்திரத்திற்கான பெண்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாயில் பல இலட்சங்கள் கையெழுத்து சேர்க்கும் பணிகள் நேற்று (25) நடைபெற்றன.

கந்தளாய் நகரில் இவ் கையெழுத்து சேர்க்கும் பணிகள் நடைபெற்றன. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் நுண் கடன் எதிர்ப்புக்கு கையெழுத்திட்டு சென்றார்கள். இச்செயற்பாடு இம் மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் மேற்கொண்டு வருவதாகவும், இறுதியில் கையெழுத்துக் கோவையை ஜனாதிபதியிடம் கையாளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# தலைமன்னாரில் ரயில் பேரூந்து விபத்துக்குள்ளான மாணவர்களுக்கு கனடா மன்னார் நண்பர்கள் ஒன்றியம் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள்

[வாஸ் கூஞ்ஞ]

அன்மையில் தலைமன்னார் பியரில் இடம்பெற்ற ரயில் மற்றும் தனியார் பேரூந்து மோதியதில் விபத்துக்குள்ளான தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை 22 மாணவர்கள் மற்றும் ஆசிரியருக்கு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் நண்பர்கள் மன்னார் பகுதியிலுள்ள நண்பர்களுடன் இணைந்து பாதிப்படைந்த இவர்களுக்கு தலா ரூபா 25 ஆயிரம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் இத்துடன் பணமும் வழங்கிய நிகழ்வு இடம்பெற்றது.

வெள்ளிக்கிழமை (23) இவ் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஜே.விஜயகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் நிகழ்வில் மன்னார் கல்விப்பணிப்பாளர் ஜே.பிரட்லி, தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி அகஸ்ரின் புஸ்பராஜ், கனடா மன்னார் நண்பர்கள் ஒன்றியத்தைச்




சார்ந்த மன்னார் மாவட்டத்தின் சிரேஷ்ட பொறியியலாளர் றொபேட் பீரீஸ், ஓய்வுநிலை பிரதி கல்விப்பணிப்பாளர் யூட் பிகிராடோ, பிரதி கல்விப்பணிப்பாளர் பி.ஞானராஜ் உட்பட விபத்தில் பாதிப்படைந்த மாணவர்களின் பெற்றோர் பாதிப்படைந்த மாணவர்கள். ஆசிரியர் ஆகியோர் இவ் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கனடாவில் வசிக்கும் நீ.சில்வஸ்ரர் தலைமையில் இயங்கும் மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த நண்பர்கள் வட்டமே மன்னார் மாவட்டத்தில் இவ்வாறு பாதிப்படையும் மாணவர்களுக்கு. முதியோருக்கு மற்றும் இனம் காணப்படும் நபர்களுக்கு இவ்வாறான உதவிகளை மன்னாரில் வசிக்கும் நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து இவ்வாறான உதவிகளை நீண்டகாலமாக மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.




[பொன்ஆனந்தம், ஹஸ்பர் ஏ. ஹலீம்]

திருகோணமலையின் மூத்த கவிஞர் தாமரை தீவான் சோ. இராசேந்திரம் அவர்களின் "முருகியம்" நூல் வெளியீடு இ. அன்பழகன் தலைமையில் இடம்பெற்றது.

கிருஷ்ணபுரம், திருகோணமலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளியீட்டை இலக்கியவாதி மைக்கேல் கொலின் வெளியீட்டு வைத்தார். வெளியீட்டுரையை ந. முருகானந்தம் நிகழ்த்தினார். வாழ்த்துக்கவியை அ. கௌரிதாசன் மேற்கொள்ள நன்றியுரையை இரா. நெடுஞ்செழியன் மேற்கொண்டார்.

ஏற்புரையை கிழக்கின் மூத்த கவி தாமரைதீவான் நிகழ்த்தினார். திருகோணமலையின் பட்டிதொட்டி எல்லாம் கவி படித்த தாமரைத்தீவான் ஓய்வுநிலை அதிபராவார். கிண்ணியா ஈச்சந்தீவு கிராமத்தை பிறப்பிடமாக கொண்ட மரபுக்கவிஞர் தாமரைத்தீவான் இதுபோன்ற பல நூல்களை இலக்கிய ஆர்வலர்களுக்கு வழங்கிய தமிழ் கொள்கைப்பற்றாளனாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த நாடு துண்டாடப்பட்டு பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படுகின்றது



(க.கிஷாந்தன்)

மலையக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகம் செய்த அநீதிக்கு இன்று இந்த நாடு துண்டாடப்பட்டு பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படுகின்றது. இது ஒரு துரதிஸ்டமான நிலைமை என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் மறுசீரமைப்பு கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பதுளை ரிவ் சைட் விருந்தகத்தில் நடைபெற்றது.மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.கூட்டத்திற்கு முன்பாக மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாணத்திற்கான புதிய காரியாலயமும் திறந்து வைக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான விஜேசந்திரன் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் கே.சுப்பிரமணியம் நிதிச்செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா மகளிர் அணி செயலாளர் திருமதி சுவர்ணலதா பிரதேச சபை உறுப்பினர் திருமதி கிருஸ்ணவேனி பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் பிரதி செயலாளர் பத்மநாதன் பிரதி செயலாளரும் பிரதேச சபை உறுப்பினருமான சிவஞானம் உட்பட மலையக மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய இராதாகிருஸ்ணன்;

இன்று இலங்கை என்ற அழகிய தீவு ஒவ்வொரு நாட்டிற்கும் துண்டாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.அதற்கு காரணம் அன்று பெரும்பான்மை சமூகம் மலையக மக்களுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் இந்த நாட்டில் இழைக்கப்பட்ட அநீதியாகும்.

இதன் கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டிருந்த முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலு இராதாகிருஷ்ணன் 3ஆவது மாடியை விரைவில் நிர்மாணித்துத் தருவதாக உறுதியளித்தார். ஆனால் இன்றுவரை அது ஈடேறவில்லை.

அத்துடன் மாணவர்களின் விளையாட்டு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான விளையாட்டு மைதான வசதி கூட இல்லாத நிலையில் பாரதி மகா வித்தியாலயம் கடந்த பல வருடங்களாகவே இயங்கி வருகின்றது.

இவ்வாறான நிலையில் கடந்த வாரம் குறித்த பாடசாலையின் பழைய கட்டடம் அமைந்துள்ள பிரதேசத்தில் காணி பிரச்சினை ஒன்று தலவாக்கலை தோட்ட நிர்வாகத்திற்கும் பாடசாலைக்கும் ஏற்பட்டது. பழைய கட்டிடத்தை விடுதிகளாக அமைத்துக்கொண்டு வசித்துவரும் பாடசாலை ஆசிரியர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஒருவர் தமது வீட்டு தேவைக்காக குறித்த பிரதேசத்தில் பாடசாலைக்கு சொந்தமான காணியில் வீட்டுத்தோட்டம் ஒன்றினை கடந்த நான்கு வருடங்களாக செய்து வருகின்றார்.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபே ராஜபக்ஷவின் பொதுவான வேண்டுகோளுக்கமைய வீட்டுத் தோட்டம் ஒன்றினை செய்து அதன் ஊடாக தமது குடும்பத்திற்கு தேவையான மரக்கறி வகைகளை பெற்றுக்கொள்வதாக அந்த ஆசிரியை தெரிவித்தார். இருந்தபோதிலும் மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான தலவாக்கலை தோட்ட நிர்வாகம் குறித்த காணியில் எவ்விதமான பயிர் செய்கையும் செய்யக் கூடாது என்றும் அவ்வாறு செய்யும் பட்சத்தில் பலாத்காரமாக அவை பிடுங்கப்படும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு எதிராக தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தது. குறித்த காணிப் பிரச்சினையானது கடந்த மூன்று வருடங்களாகவே நடைபெற்று வருவதால், இவ்விடயம் தொடர்பில் நுவரெலியா மக்கள் பிரதிநிதிகளிடம் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆனாலும் இன்றுவரை குறித்த பிரச்சினை தீர்வின்றி இழுபறி நிலையிலேயே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் காணப்படும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களைதுரிதப் படுத்த வேண்டும் என்றும் பல பாடசாலைகளில் நிலவும் காணி, கட்டிடம், தளபாடங்கள், பௌதீக வளங்கள் மற்றும் ஆளணி பற்றாக்குறைகளை தீர்ப்பதற்கு முதற்கட்டமாக நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். நுவரெலியா கண்டி மாத்தளை ஆகிய மாவட்டங்களையும் மலையகத்தின் ஊவா சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம்.

அத்தோடு மலையகத்தில் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த பல வருடங்களாக விடுக்கப்பட்டு வரும் நிலையில் பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கு மாணவர்களை உருவாக்கும் பாடசாலைகளில் அடிப்படைத் தேவைகளையும் பிரச்சனைகளையும் இனங்கண்டு அரசியல் பேதமின்றி சகல பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களைதமிழ்பேசும் மக்கள் பிரதிநிதிகள் ஒற்றுமையாக முன்னெடுக்க வேண்டும். மலையக கல்வி சமூகத்தின் இவ் வேண்டுகோள் நிறைவேற்றப்பட வேண்டும்.

# ஜனாதிபதி கோத்தாவை நம்பி வாக்களித்த தமிழர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது

(நூருல் ஹுதா உமர்)



கடந்த பொது தேர்தலில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் சுமார் 30,000 வாக்குகளை பெற்று கொண்ட நபர் எமது மக்களை ஏமாற்றி விட்டார். கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி தருவார் என்கிற நம்பிக்கையில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோதாபய ராஜபக்ஸவுக்கு கல்முனை தமிழ் மக்களில் குறிப்பிட்ட தொகையினர் வாக்களித்து உள்ளனர். ஆனால் இறுதியில் ஏமாற்றம்தான் மிஞ்சியது என காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் கவலை தெரிவித்தார்.

இன நல்லிணக்கத்தை முன்னிறுத்தி காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகத்துக்கும், அம்பாறை சதாதிஸ்ஸபுர விளையாட்டு கழகத்துக்கும் இடையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அன்று காரைதீவு கனகரட்ணம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற சிநேகபூர்வ கடின பந்து கிறிக்கெட் போட்டியின் பரிசளிப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இந்நாட்டில் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு தமிழர்கள் எப்போதும் தயாராகவே உள்ளார்கள் என்பதற்கான நல்லெண்ண சமிக்ஞையை காரைதீவு விவேகானந்தா விளையாட்டு கழகம் வழங்கியுள்ளது. இந்த நாட்டில் தமிழ் மக்களின் உரிமைகள், சுதந்திரங்கள் ஏற்று அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். தமிழ் மக்களுக்கான அபிவிருத்திகள் செய்து தரப்பட வேண்டும். ஆனால் யதார்த்தத்தில் அவ்வாறாக இல்லை. எமது இந்த கனகரட்ணம் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தி தர வேண்டும் என்று காலம் காலமாக சிங்கள அமைச்சர்கள் மற்றும் அரசாங்க எம். பிகள் ஆகியோரிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. அவர்களும் வந்தார்கள். வாக்குறுதிகள் தந்தார்கள். சென்றார்கள். எவையும் நடக்கவே இல்லை என்றார்

# மலேரியா அச்சுறுத்தல் வடபகுதியில் அச்சம்

நகர்ப்புறங்களில் மலேரியா நோயை பரப்பும் ஒரு புதிய வகை நுளம்பு வடபகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டில் இலங்கை மலேரியா நோய் யற்ற நாடாக உலக சுகாதார அமைப்பினால் அறிவிக்கப்பட்ட போதிலும், இந்த நோய் மீண்டும் நாட்டில் தலையெடுக்கும் சாத்தியம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இதுதொடர்பாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய, இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவி பேராசிரியர் அனுலா விஜேசுந்தர இந்த நுளம்பு குறித்து பொது மக்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கையின் வெப்ப நிலை மற்றும் நீர்வளம் இந்த நுளம்பின் இனப்பெருக்கத்தத்திற்கு ஏற்றதாக அமைந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட அனோபிலஸ் டிபென்சி Anopheles Defensi mosquito நுளம்பின் புதிய இனங்கள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக பேராசிரியர் விஜேசுந்தர தெரிவித்தார். இந்தியா மற்றும் சீனாவிலிருந்து வருபவர்கள் , குறிப்பாக கட்டுமானத் தொழில் துறையில் ஈடுபடுவோர் மற்றும் யாத்ரீகர்கள், இந்த நோயை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் மருத்துவ சங்கத்தின் தலைவி குறிப்பிட்டார்.

இரத்தினக்கல் வர்த்தக நடவடிக்கைகளுக்காக மொசாம்பிக் மற்றும் மடகாஸ் தீவுகளுக்கு செல்லும் வணிகர்கள் தங்கள் பயணத்தின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பேராசிரியர் அனுலா விஜேசுந்தர, கேட்டுக்கொண்டார்.

# தடுப்பூசி ஊடாக மாத்திரமே கோரோனா பரவலை கட்டுப்படுத்த முடியும்

கொவிட் தடுப்பூசி ஊடாக மாத்திரமே கொரோனா பரவலை கட்டுப்படுத்த முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றை வெளியிட்டு ஜனாதிபதி ஊடக பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

அதேபோல், முதலாவது கொரோனா பரவலின் போது செயற்பட்ட விதத்தில், தற்போதைய சவாலை சமாளிக்க சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்த அனைத்து விதிகளையும் வழிகாட்டல்களையும் மக்கள் கடுமையாக பின்பற்ற வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், மக்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான முறையான திட்டமொன்றை



அரசாங்கம் தயாரித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மற்றும் அங்கீகரிக்கப்படவுள்ள நான்கு கொவிட் தடுப்பூசிகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. முதலில் இறக்குமதி செய்யப்பட்ட எஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி 925,242 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் மே முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. முன்னணி சுகாதார அதிகாரிகள், முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 356,000 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்படவுள்ளது. மீதமுள்ள தேவையை பூர்த்தி செய்துக் கொள்வதற்காக எஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி தயாரிக்கும் உலகின் ஏனைய நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்த சதி

இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச பணித்துள்ளார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன், கோ.கருணாகரம், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிமலநாதன் ஆகியோர் அமைச்சர் சமல் ராஜபக்சவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதையடுத்து இவ் இடைநிறுத்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்நிலையில் கல்முனைப்பிராந்திய அரசியல்வாதிகள் சிலரின் கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.

**தமிழ் மக்களின் முதுகில் குத்தும் செயற்பாடு!**

தமிழ்பேசும் சமுகங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி அரசியல் லாபம் தேடும் ஒருசில முஸ்லிம் அரசியல்வாதிகளின் கைங்கரியமே இது. ஐக்கியம் பேசிப்பேசி தமிழ்மக்களது முதுகில் குத்தியுள்ளனர். இதை விடமாட்டோம் என்கிறார் அம்பாறை மாவட்ட த.தே.கூ.பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன்.

அவர் மேலும் கூறுகையில்:

30வருடமாக இருந்துவந்த ஒரு செயலகத்தை தரங்குறைப்பதென்பது இலங்கை வரலாற்றில் முதல்தடவையாக இடம்பெற்றுள்ளது.இதற்கு முஸ்லிம் ஒருசில அரசியல்வாதிகள் துணைபோயிருப்பது வடக்கு கிழக்கில் நிரந்தரமான உறவை கேள்விக்குரியாக்கியுள்ளது.

நாம் பேசவேண்டிய இடத்தில் பேசியுள்ளோம். என்றார்.

**தமிழ்முஸ்லிம்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த சதி!**

கல்முனையில் இல்லாததொரு விடயத்தை இருப்பதுபோல காட்டி மீண்டும் தமிழ் முஸ்லிம் மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ண சதி செய்கிறார்கள்.இதில் இருசாராரும் சிக்கிவிடக்கூடாது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹசன் அலி கூறினார்.

தரமுயர்த்தலுக்கான கடிதம் இல்லாத நிலையில் தற்போது தரங்குறைப்பு பற்றி அறிவித்தல் விடுப்பது வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தும் சதியாகும். மாகாணசபைத் தேர்தலுக்கான முன் நடவடிக்கையே இது.

கல்முனை வடக்கு பிரதேசசெயலக தரங்குறைப்புத் தொடர்பில் கருத்துரைக்கையில் அவர் மேலும் கூறியதாவது 20க்கு கைதூக்கியோர் தமது சமுகத்திடமிருந்து தப்புவதற்கும் தாம் மக்களுக்கு சேவை செய்வதாகவும் ஒரு மாயை காட்டிவருகிறார்கள். அதன் ஒரு வெளிப்பாடே இது.

**தரமுயர்த்தலுக்கான முதல் ஏற்பாடே இது!**

உண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கான ஏற்பாடே இந்த அறிவித்தல் என்று வடக்கு பிரதேச செயலக தரங்குறைப்பு தொடர்பாக பிரதமரின் மட்டு அம்பாறை இணைப்பு செயலாளர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) கருத்து தெரிவிக்கையில்;

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக 22 ஆம் திகதி அமைச்சர் சமல் இராஜபக்சவை நேரில் சந்தித்து உரையாடினேன். குறித்த அறிவித்தல் தொடர்பில் யோசிக்க வேண்டாம். இது யாருக்கும் பாதிப்பான அறிவித்தல் இல்லை.

வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கான ஏற்பாடே இந்த அறிவித்தல். உப பிரதேச செயலகம் எனும் இடத்தில் இருந்தே பிரதேச செயலகத்திற்கான அறிவித்தலை வெளியிட முடியும் அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன இதனடிப்படையிலேயே உப பிரதேச செயலகம் என பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது என அமைச்சர் சமல் இராஜபக்கச எங்களிடம் தெரிவித்தார். எல்லை நிர்ணயம் தொடர்பான முன்னெடுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன இவை தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை நான் எதிர்வரும் 2% ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்தித்து விஷேடமாக கலந்துரையாடவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் சந்திப்பு உள்ளது என கருணா கூறினார்.

**தமிழ்மக்களை நோகடிக்கும் செயல்!**

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் இவ்வாறாறு இழுத்தடிக்கபடுவதும் அறிவித்தல் வருவதும் மேலும் மேலும் இந்த மக்களை நோகடிக்கும் செயலாகும் என கல்முனை மாநகர சபை உறுப்பினர் கென்றி மகேந்திரன் தொவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் அனைத்து தமிழ் தரப்பும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் எமது மக்களின் நியாயமான கோரிக்கை நீண்ட கால ஏக்கம் இதற்கு அரசாங்கம் நல்ல தீர்வை தர வேண்டும் நான் அங்கம் வகிக்கும் கட்சியுடனும் இந்த விடயங்கள் தொடர்பாக பேசியிருக்கின்றேன். எங்கள் வல்லமைக்குட்பட்ட வகையில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்போம்.அவ்வாறே அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ்த் தரப்பும் இதனை அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை மேலும் தாமதியாது தரமுயர்த்த நடவடிக்கை விரைந்து எடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org